DEPOSITION OF WITNESS
IN THE COURT OF SPECIAL COURT FOR TRIAL OF CASES REGISTERED UNDER SC/ST(POA)ACT, 1989, RAMANATHAPURAM

**Spl.Sessions Case No.12/2020**

அ.சா.11

Prosecution witness

| | |
|---|---|
| Name: மரு. கார்த்திக் | Caste: |
| Father's Name: | Calling: |
| Village: | Religion: |
| Taluk: | Age: |

Solemnly affirmed in accordance with the provisions no of Act X of 1873 of the day of 19.10.2023.

(A5, A6 absent. Petition u/s. 317 Crpc filed and allowed. Others present)

<u>முதல் விசாரணை</u>

நான் தற்போது திருச்சி மகாத்மா காந்தி மருத்துவ கல்லூரி மருத்துவமனையில் மனநல மருத்துவராக பணிபுரிகிறேன். இதற்கு முன்பு நான் 2020 ல் இராமநாதபுரம் அரசு தலைமை மருத்துவமனையில் உதவி மருத்துவராக பணிபுரிந்தேன். கடந்த 21.03.2020 அன்று இரவு அவசர சிகிச்சை பிரிவில் பணிபுரிந்தபோது சுமார் 11.30 மணியளவில் 23 வயது மதிக்கத்தக்க அரவிந்தன் த/பெ. வைரவகேசு, தேவிப்பட்டிணம், இராமநாதபுரம் என்பவரை அவரது தந்தையார் மருத்துவமனைக்கு கொண்டு வந்திருந்தார். அவர் பைக்கில் சக்கரவாளநல்லூர் அருகில் சென்றபோது 10.40 மணியளவில் நான்கு சக்கர வாகனத்தில் நான்கு தெரிந்த நபர்கள் அவர் மீது மோதியதாக சொன்னார். அவரை பரிசோதனை செய்ததில் தலை மற்றும் உடம்பில் காயத்துடன் மயக்கநிலையில் இருந்தார். மூச்சுவிட திணறி கொண்டு இருந்தார். அவரது கண்களைப் பரிசோதித்து பார்த்ததில் அவர் ஆபத்தான நிலையில் இருந்தார். அவருக்கு

அவசர சிகிச்சை வழங்கப்பட்டது. போதுமான சிகிச்சை அளித்தும் சிகிச்சை பலனின்றி அவர் 11.45 மணிக்கு இறந்துவிட்டார். பின்னர் அவர் பிரேதத்தை சவக்கிடங்கிற்கு அனுப்பி வைத்தேன். நான் அவருக்கு வழங்கிய விபத்து பதிவேட்டு நகல் **அ.சா.ஆ. 6**. பின்பு 22.03.2020 ம் தேதி அதிகாலை சுமார் 2.30 மணிக்கு மேற்படி சம்பவத்தில் காயம்பட்ட கல்யாணக்குமார், வயது 23 என்பவரை அவரது உறவினர் மாரிதாஸ் என்பவர் அழைத்து வந்தார். அவர் பைக்கில் சக்கரவாளநல்லூர் அருகில் சென்றபோது 10.40 மணியளவில் நான்கு சக்கர வாகனத்தில் நான்கு தெரிந்த நபர்கள் அவர் மீது மோதியதாக சொன்னார். அவரை பரிசோதனை செய்து பார்த்ததில் இடது கால், வலது கணுக்கால் , வலது கைமுட்டி ஆகியவற்றில் காயங்கள் இருந்தன. முதுகுவலி இருந்ததாக சொன்னார். அவர் சுயநினைவுடன் இருந்தார். அவரை பரிசோதனை செய்ததில் அவருக்கு கீழ்கண்ட காயங்கள் காணப்பட்டன. 1. 3 சிராய்ப்பு காயங்கள் இடது காலில் 3x2 செ.மீ அளவில், 2. வலது கை முட்டியில் இரண்டு சிராய்ப்பு காயங்கள் 3x2 செ.மீ அளவில், 3. 2 x 1 செ.மீ அளவிலான ஒரு சிராய்ப்பு காயம் வலது கணுக்காலில் காணப்பட்டன. பரிசோதித்த பிறகு அவரை எம்.எஸ். 2 வார்டிற்கு உள்நோயாளியாக சிகிச்சை பெற அனுப்பி வைக்கப்பட்டார். அவர் சிகிச்சை முடியும் முன்பே தன்னிச்சையாக சென்றுவிட்டதால் கருத்து வழங்க இயலவில்லை என்று குறிப்பிட்டேன். நான் அவருக்கு வழங்கிய விபத்து பதிவேட்டு நகல் **அ.சா.ஆ.7**. இதுசம்பந்தமாக போலிசார் என்னை விசாரித்தார். மேற்படி நபர்களுக்கு ஏற்பட்ட காயம் இருநபர்கள் இருசக்கர வாகனத்தில் சென்று கொண்டிருக்கும்போது அவர்களை காரில் மோதினால் ஏற்பட வாய்ப்புண்டு.

**எதிரிகள் தரப்பில் பொது குறுக்கு விசாரணை : –**

இந்த வழக்கு சம்பந்தமாக யார் எங்கே விசாரித்தார்கள் என்றால் நான் பணியில் இருந்தபோது 22.03.2020 அன்று விசாரித்தார்கள். என்னை போலிசார் விசாரித்தார்கள் யார் என்று எனக்கு தெரியாது. நான் வழங்கிய விபத்து பதிவேட்டு நகலைப் பார்த்து தான் நான் சாட்சியளித்தேன். விபத்து பதிவேட்டு நகல்களில் "RTA " என்று எழுதியுள்ளேன் என்றால் சரிதான். இறந்துபோன அரவிந்தனையும் கல்யாணக்குமாரையும் ஒரே நேரத்தில்தான் சிகிச்சைக்கு ஆஜர்படுத்தினார்களா என்றால் என்னுடைய விபத்து பதிவேட்டின்படி ஒரே நேரத்தில் கொண்டுவரப்படவில்லை. காயம்பட்ட அரவிந்தனை எந்த வாகனத்தில் கொண்டு வந்தார்கள் என்று எனக்கு தெரியாது. Medical code ன் படி காயமுற்ற நபர் சொல்வதைத்தான் நான் விபத்து பதிவேட்டு நகலில் பதிவு செய்ய வேண்டும் என்று சொன்னால் சரிதான். அ.சா.ஆ.6,7 ஆகிய விபத்து பதிவேட்டு நகல்களில் "நான்கு தெரிந்த நபர்கள்" என்பது பின்னிட்டு சேர்க்கப்பட்டிருக்கிறது என்றால் சரிதான். அவர் பின்னர் சொன்னபிறகு எழுதப்பட்டது. வழக்கு வரலாற்றை யார் சொன்னார்கள் என்றால் அவருடன் சிகிச்சைக்கு வந்தவர்கள் சொன்னார்கள். அ.சா.ஆ.6,7 ஆகிய இரு சான்றிதழ்களிலும் போலிசாருக்கு தெரிவிக்கப்பட்டதா என்பது குறித்து குறிப்பு இல்லை என்றால் சரிதான். இறந்துபோன அரவிந்தனுக்கு என்ன என்ன காயங்கள் இருந்தன என்பதை விபத்து பதிவேட்டு நகலில் குறிக்கவில்லை என்றால் சரிதான். அவருக்கு வெளிக்காயங்கள் பற்றி எதுவும் விபத்து பதிவேட்டு நகலில் நான் குறிப்பிடவில்லை என்றால் சரிதான். விபத்து பதிவேட்டு நகலில் அவர் இறந்த விவரத்தை எழுத வேண்டிய அவசியம் இல்லை என்றால் சரியல்ல. அ.சா.ஆ.6 விபத்து பதிவேட்டு நகலில் இரண்டு

இடங்களில் அடித்தல் திருத்தல் உள்ளது என்றால் சரிதான். அ.சா.ஆ.6 விபத்து பதிவேட்டு நகல் அரவிந்தன் இறந்தபிறகு போலிசார் கேட்டுக்கொண்டதன்பேரில் நான் தயாரித்து கொடுத்தேன் என்றால் சரியல்ல. அ.சா.ஆ.7 ல் கல்யாணக்குமாருக்கு ஏற்பட்ட காயங்கள் பற்றி சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். அதில் புறநோயாளியாக சிகிச்சை வழங்கப்பட்டது என்பதை அடித்துவிட்டு உள்நோயாளியாக அனுமதிக்கப்பட்டார் என்று எழுதியுள்ளேன் என்றால் சரிதான். அ.சா.ஆ.7 ல் கருத்து வழங்க இல்லை என்று எழுதவேண்டிய அவசியம் இல்லை என்றால் விபத்து பதிவேட்டுக்கு பின் அவ்வாறு எழுதுவது வழக்கம். கல்யாணக்குமாருக்கு சிகிச்சை வழங்கப்பட்ட விவரங்கள் என்னிடம் இல்லை. கருத்து இல்லை என்று எப்போது எழுதினேன் என்று கேட்டால் தேதி குறிப்பிடவில்லை. நான் சட்டம் சார்ந்த குற்ற வழக்குகளில் கடைப்பிடிக்க வேண்டிய வழிமுறைகளை கடைபிடிக்கவில்லை என்று சொன்னால் சரியல்ல. அ.சா.ஆ.6,7 ஆவணங்களை போலிசாரை திருப்தி படுத்தவேண்டும் என்ற நோக்கத்துடன் நான் பின்னிட்டு தயார் செய்து கொடுத்தேன் என்றால் சரியல்ல.

Sd/- B.C.Gopinath
Sessions Judge,
Special Court for Trial of Cases Registered
under SC/ST(POA) Act,
Ramanathapuram.(FAC)

DEPOSITION OF WITNESS
IN THE COURT OF SPECIAL COURT FOR TRIAL OF CASES REGISTERED
UNDER SC/ST(POA)ACT, 1989, RAMANATHAPURAM
**Spl.Sessions Case No.12/2020**

அ.சா.12

Prosecution witness

| | | | |
|---|---|---|---|
| Name: | முருகவேல் | Caste: | |
| Father's Name: | வாணித்துரை | Calling: | |
| Village: | | Religion: | |
| Taluk: | | Age: | |

Solemnly affirmed in accordance with the provisions no of Act X of 1873 of the day of 19.10.2023.

(A5, A6 absent. Petition u/s. 317 Crpc filed and allowed. Others present)

முதல் விசாரணை

நான் தற்போது இராமநாதபுரம் மாவட்டம் மாவட்ட ஆட்சியர் அலுவலக உதவி ஆணையர் அலுவலகத்தில் அலுவலக மேலாளராக பணிபுரிந்து வருகிறேன். இதற்கு முன்பு நான் இராமநாதபுரம் வட்டாட்சியராக பணிபுரிந்தபோது 14.04.2020 ல் தேவிப்பட்டிணம் காவல்நிலைய குற்ற எண். 67/2020 ல் சம்பந்தப்பட்ட அரவிந்தன்,கல்யாணக்குமார் மற்றும் வழக்கின் எதிரிகள் பாலா என்ற பாலமுரளிகிருஷ்ணா, சரவணன், சேதுபதி, இளையராஜா, மகேந்திரன், கார்த்திக், கதிஷ் ஆகியோரது சாதி குறித்து சான்றிதழ் வழங்குமாறு இராமநாதபுரம் துணைக்காவல் கண்காணிப்பாளர் வேண்டுகோள் கடிதம் கொடுத்தார். சம்பந்தப்பட்ட கிராம நிர்வாக அலுவலர்களின் அறிக்கையின்படி அரவிந்தனுக்கு இந்து பள்ளர் சமுதாயத்தை சார்ந்தவர் என்று எனது 01.06.2020ம் தேதியிட்ட கடிதம் மூலம் அறிக்கை கொடுத்தேன். அது **அ.சா.ஆ.8**. அதேபோல் கல்யாணக்குமார்

த/பெ. பூமிநாதன் என்பவர் இந்து பள்ளர் சமுதாயத்தை சார்ந்தவர் என்று எனது 01.06.2020ம் தேதியிட்ட கடிதம் மூலம் அறிக்கை கொடுத்தேன். அது **அ.சா.ஆ.9**. அதேபோல் எதிரிகள் பாலா என்ற பாலமுரளிகிருஷ்ணா, சரவணன் த/பெ. முனீஸ்வரன், கார்த்திக் த/பெ. பாண்டி, கதிஷ் த/பெ. நாகேந்திரன் ஆகியோர் இந்து மறவர் வகுப்பைச் சார்ந்தவர்கள் என்று எனது முமுபி2/1660/2020 நாள். 01.06.2020 தனித்தனி கடிதங்கள் மூலம் தெரிவித்தேன். அந்த கடிதங்கள் முறையே **அ.சா.ஆ.10 முதல் அ.சா.ஆ.13.** அதே தேதியில் எதிரி சேதுபதி த/பெ. இராமநாதன் என்பவர் நாடார் வகுப்பையும், எதிரிகள் இலசு என்ற இளையராஜா மற்றும் மகேந்திரன் ஆகியோர் இந்து அகமுடையார் வகுப்பைச் சேர்ந்தவர்கள் என்று தனித்தனியே கடிதம் வழங்கினேன். அவை முறையே **அ.சா. ஆ. 14 முதல் அ.சா.ஆ.16.** அதே வழக்கில் சம்பந்தப்பட்ட எதிரி பாஸ்கரன் என்பவரின் சாதிகுறித்து சான்றிதழ் வழங்க இராமநாதபுரம் காவல்துணைக்கண்காணிப்பாளர் 19.06.2020ம் தேதியிட்ட வேண்டுகோள் கடிதம் கொடுத்தார். அதனடிப்படையில் சம்பந்தப்பட்ட கிராம நிர்வாக அலுவலரின் அறிக்கையின்படி எனது 25.09.2020ம் தேதியிட்ட கடிதம் மூலம் எதிரி பாஸ்கரன் த/பெ. தங்கவேல் என்பவர் இந்து அகமுடையார் வகுப்பைச் சேர்ந்தவர் என்று கடிதம் வழங்கினேன். அந்த கடிதம் **அ.சா.ஆ.17.** இதுசம்பந்தமாக இராமநாதபுரம் காவல்துணைக் கண்காணிப்பாளர் என்னை விசாரித்தார்.

**எதிரிகள் தரப்பில் பொது குறுக்கு விசாரணை:-**

என்னை இராமநாதபுரம் டிஎஸ்பி 04.10.2020 அன்று அலுவலகத்தில் விசாரித்தார். ஆவணங்களைப் பார்த்துதான் கையொப்பம் செய்தேன். அ.சா.ஆ.8 முதல் 16 வரை உள்ள ஆவணங்களில் இராமநாதபுரம்

காவல்துணைக் கண்காணிப்பாளரின் கடிதம், நாள் என்பது 11.03.2020 என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். அ.சா.ஆ.17 ல் கிராம நிர்வாக அலுவலரின் அறிக்கையின் அடிப்படையில் சான்றிதழ் வழங்கப்பட்டதாக காணப்படவில்லை என்றால் சரிதான். நான் முறைப்படி ஆவணங்களைச் சரிபார்த்துவிட்டு சான்றிதழ்கள் வழங்கவில்லை என்று சொன்னால் சரியல்ல.

Sd/- B.C.Gopinath

Sessions Judge,
Special Court for Trial of Cases Registered
under SC/ST(POA) Act,
Ramanathapuram.(FAC)